DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.12 /2025

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டிமுனியசாமி | Father's/Husband's Name : | வாசுதேவன் |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் எனக்கு தெரியவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து என குறிப்பிட்டுள்ள சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு கிழக்கு பக்கம் எனக்கு இடம் இருக்கிறது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு கிழக்கு பக்கம் குமணன்தொழு செல்லும் சாலை இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி எனக்கு பாத்தியப்பட்டதாகச் சொல்லும் இடத்தையும் ராமன் வகையறா தான் அனுபவத்தில் வைத்து சோளப் பயிர் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா வனத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான்.

2) வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அப்பாவின் தம்பி மகன், எனக்கு அண்ணன் முறை. வாதியின் அப்பா எப்போது இறந்தார் என்றால் 2023ம் ஆண்டில் இறந்தார், தேதி மாதம் தெரியவில்லை. தாவா சொத்தை வாதி மட்டும் அனுபவம் செய்து வந்தாரா அல்லது அவரது சகோதர சகோதரிகளும் அனுபவம் செய்தார்களா என்றால் வாதி மட்டும் தான் அனுபவம் செய்து வந்தார். தாவா சொத்தில் வாதி தான் அனுபவத்தில் இருக்கிறார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோனா என்றால் வாதி தாக்கல் செய்திருக்கிறார். தாவா இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள நிலத்திலும் பிரதிவாதிகள் தான் சோளப் பயிர் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் எப்போதும் அந்த சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும்

சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) வாதியின் தந்தை அரசு பணியாளர் என்பதால் அவருக்கு அரசாங்கத்தால் இலவச பட்டா வழங்க வாய்ப்பில்லை என்றும் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதியோ அவரது தகப்பனாரோ எந்தகாலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் வல்லைவெட்டி இன்று வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 26.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.26 14:00:23 +0530

District Munsif,
Aundipatti.